# வேலூர் மாநகராட்சி

# ஆட்சி அறிக்கை 2014-15

## அமைப்பும் ஆட்சியும்

### 1. ஆட்சி வரம்பு

வேலூர் மாநகரின் பரப்பளவு சென்ற ஆண்டும், அறிக்கை ஆண்டிலும் 87.94 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இந்நகரம் சென்னையிலிருந்து 130 கிலோ மீட்டர் தூரத்தில் பாலாற்று தென் கரையில் பூமத்திய ரேகைக்கு வடக்கே 12.55 கிரீன்வீச்சுக்கு கீழே 79.88-லும் கடல் மட்டத்திலிருந்து 212.90 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அறிக்கை ஆண்டில் நகரின் எல்லையிலும், தொகுதி பிரிவுகளிலும் எந்த வித மாற்றமும் இல்லை.

சென்னை அரசாங்கத்தின் 30.10.1966ம் தேதிய 1107-ம் ஆணைப்படி 1865-ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி திட்டத்தின்படி 01.11.1866-ம் தேதியிலிருந்து கஸ்பா, கோட்டை, அடவனந்தல், பேரிப்பேட்டை, வேலப்பாடி, சலவன்பேட்டை, தோட்டப்பாளையம், சங்கரன் பாளையம், அருகந்தம்பூண்டி, கொசப்பேட்டை சைதாப்பேட்டை, கமிசரி பஜார், ஆக 12 பகுதிகளை சேர்த்து வேலூர் நகரம் என அமைத்து பிரகடனம் செய்து அதற்கு டவுன் கமிஷன்கள் என்ற 12 அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டார்கள். மாவட்ட நீதிபதியும், மராமத்து இலாக்கா பொறியாளரும் சிறப்பு அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டார்கள். பின்பு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்படி நகராட்சியாக அனுமதிக்கப்பட்டு, இதன் நிலை படிப்படியாக உயர்ந்து (30.12.1978-ம் நாளை 2007-ம் எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணைப்படி 01.01.1979-ம் தேதி முதல் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. அரசு ஆணை 136 நாள்.08.08.2008-ன்படி 01.08.2008 முதல் வேலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.89 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள்.28.06.2011 ன்படி தாராபடவேடு, சத்துவாச்சாரி ஆகிய இரு முன்றாம்நிலை நகராட்சிகள், தொரப்பாடி, அல்லாபுரம், காந்திநகர், காட்பாடி, கழிஞ்சூர், சேண்பாக்கம் ஆகிய ஆறு பேரூராட்சிகள், அரியூர், சித்தேரி, இடையன்சாத்து, பலவன்சாத்து, கொணவட்டம், அலமேலுமங்காபுரம், விருதம்பட்டு, விருபாட்சிபுரம்,

காங்கேயநல்லூர் ஆகிய ஒன்பது கிராம ஊராட்சிகள் இணைந்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியாக திகழ்ந்து வருகிறது. மேலும் மேற்கண்ட அரசாணையின்படி 60 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 15 வார்டுகளைக் கொண்ட பகுதி மண்டலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு நான்கு மண்டலங்களைக் கொண்ட மாநகராட்சியாக திகழ்கிறது.

**2. மண்டலங்கள் விவரம் :**

| மண்டலங்கள் | மண்டல அலுவலக அமைவிடம் | மண்டலங்கள் உள்ளடங்கிய முன்னாள் நகராட்சி/ பேரூராட்சி/ஊராட்சி விவரம் | தற்போதைய வார்டு எண்கள் |
|---|---|---|---|
| மண்டலம் 1 | தாராபடவேடு | தாராபடவேடு 3ம் நிலை நகராட்சி | 1,3,5,6,7 |
| | | காட்பாடி பேரூராட்சி | 2,4,8 |
| | | காந்திநகர் பேரூராட்சி | 9,12 |
| | | கழிஞ்சூர் பேரூராட்சி | 10,11 |
| | | காங்கேயநல்லூர் ஊராட்சி | 13,14 |
| | | விருதம்பட்டு ஊராட்சி | 15 |
| மண்டலம் 2 | சத்துவாச்சாரி | வேலூர் நகராட்சி | 16,25,26,27, 28,29,30 |
| | | சத்துவாச்சாரி 3ம் நிலை நகராட்சி | 17,18,19,20, 22,23,24 |
| | | அலமேலுமங்காபுரம் ஊராட்சி | 21 |
| மண்டலம் 3 | வேலூர் | வேலூர் நகராட்சி | 31,32,33,34, 35,36,37,38 |
| | | அல்லாபுரம் பேரூராட்சி | 39,40,41 |
| | | பலவன்சாத்து ஊராட்சி | 42,45 |
| | | விருபாட்சிபுரம் ஊராட்சி | 43,44 |
| மண்டலம் 4 | சேண்பாக்கம் | இடையன்சாத்து ஊராட்சி | 46 |
| | | சித்தேரி ஊராட்சி | 47 |
| | | அரியூர் ஊராட்சி | 48 |
| | | தொரப்பாடி பேரூராட்சி | 49,49 |
| | | அல்லாபுரம் பேரூராட்சி | 51 |
| | | வேலூர் நகராட்சி | 52,53,54, 55,58,59 |
| | | கொணவட்டம் ஊராட்சி | 56 |
| | | சேண்பாக்கம் பேரூராட்சி | 57,60 |

## 3. மக்கள்தொகை

இம்மாநகரின் மக்கள்தொகை 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஆண்களின் எண்ணிக்கை 247002 மற்றும் பெண்களின் எண்ணிக்கை 257077 ஆகமொத்தம் 504079 ஆகும்.

| | **எண்ணிக்கை** |
|---|---|
| வேலூர் நகராட்சி | 188951 |
| தாராபடவேடு | 31457 |
| சத்துவாச்சாரி | 56951 |
| காட்பாடி | 28797 |
| கழிஞ்சூர் | 19828 |
| காந்திநகர் | 9114 |
| தொரப்பாடி | 16700 |
| அல்லாபுரம் | 31211 |
| சேண்பாக்கம் | 24485 |
| காங்கேயநல்லூர் | 15777 |
| விருதம்பட்டு | 7662 |
| அலமேலுமங்காபுரம் | 7900 |
| விருபாட்சிபுரம் | 14779 |
| பலவன்சாத்து | 22176 |
| இடையன்சாத்து | 4566 |
| சித்தேரி | 5002 |
| அரியூர் | 7251 |
| கொணவட்டம் | 11472 |
| **மொத்தம்** | **504079** |

4. மாமன்றம்

அரசாணை (நிலை) எண்.142 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.16.09.2011 ன்படி வணக்கத்திற்குரிய மேயர் பதவி பெண்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.09.2011 ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் 5 ஆம் பிரிவின்(5), (5), (6) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் மற்றும் அரசாணை (நிலை) எண்.136 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.09.2011 ன்படி திருத்தப்பட்டவாறான 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு பேருராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (வார்டு அல்லது கோட்டங்களைப் பிரித்தல் மற்றும் இடஒதுக்கீடு) விதிகளின்படியும் கீழ்காணும் கோட்டங்கள் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின நபர்களுக்கும், தாழ்த்தப்பட்ட / பழங்குடியினப் பெண்களுக்கும் மற்றும் பெண்கள் (பொ) ஆகிய இனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதன் மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| வரிசை எண். | இடஒதுக்கீடு | மொத்த எண்ணிக்கை | கோட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | பெண்கள் (பொது) | 17 | 3,8,11,12,14,17, 18,19,25,26,27, 33,39,40,54,55,56 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) | 5 | 4,15,35,48,59 |
| 3. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) | 3 | 5,57,60 |

17.10.2011 அன்று நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் 25.10.2011 அன்று பதவிப்பிரமானம் எடுத்துக் கொண்டு மாமன்றம் செயல்பட்டு வருகிறது. இம்மாமன்றத்திற்கு திருமதி.பா.கார்த்தியாயினி வணக்கத்திற்குரிய மேயராகவும், திரு.V.D.தருமலிங்கம் துணை மேயராகவும் இருந்து வருகிறார்கள்.

வேலூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு 20.11.2011 அன்று நான்கு மண்டலக் குழுத் தலைவர்கள் கீழ்கண்ட விவரப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| மண்டலம் 1 | திரு.எம்.சுனில்குமார் |
| மண்டலம் 2 | திரு.ஏ.பி.எல்.சுந்தரம் |
| மண்டலம் 3 | திரு.எஸ்.குமார் |
| மண்டலம் 4 | திரு.கே.ஐயப்பன் |

## 5. மாமன்ற கூட்டங்கள்

மாமன்ற இயல்பு கூட்டங்கள் சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் நடைபெற்றது. அறிக்கையாண்டில் 979 பொருட்கள் மாமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டங்கள் | .. | 6 |
| அவசரக் கூட்டங்கள் | .. | 8 |
| சிறப்புக்கூட்டங்கள் | .. | 7 |
| வேண்டுகோள் கூட்டம் | .. | -- |
| **மொத்தம்** | .. | 21 |

இம்மாநகராட்சி மண்டலங்களில் நடைபெற்ற மன்றக்கூட்டங்களின் பொருள் வைக்கப்ப்பட்டு அனுமதிக்கப்பட்ட விவரம்.

**<u>மண்டலம்.1.</u>**

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டங்கள் | .. | 4 |

**<u>மண்டலம்.2.</u>**

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டங்கள் | .. | 2 |

**<u>மண்டலம்.3.</u>**

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டங்கள் | .. | 5 |

**<u>மண்டலம்.4.</u>**

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டங்கள் | .. | 4 |

## 6. நிலைக்குழுக்கள்

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட விவரப்படி நிலைக்குழுக்கள் இயங்கி வருகிறது. ஒவ்வொரு நிலைக்குழுவிலும் ஒரு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர்.

1. **கணக்குகள் குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.ஏ.அன்வர் பாஷா | வார்டு எண்.30 |
| உறுப்பினர் | திரு.பி.ஆர்.நித்தியகுமார் | வார்டு எண்.15 |
| உறுப்பினர் | திருமதி.எம்.உஷா நந்தினி | வார்டு எண்.54 |
| உறுப்பினர் | திருமதி.கே.ஆர்.செல்வி ரவி | வார்டு எண்.11 |
| உறுப்பினர் | திரு.எஸ்.ராஜா | வார்டு எண்.6 |
| உறுப்பினர் | திரு.ஆர்.கே.நவீன் குமார் | வார்டு எண்.9 |

2. **கல்விக் குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.கே.சூரியாச்சாரி | வார்டு எண்.41 |
| உறுப்பினர் | திரு.ஜி.அன்பு | வார்டு எண்.42 |
| உறுப்பினர் | திருமதி.உமா பேபி | வார்டு எண்.5 |
| உறுப்பினர் | திரு.வி.டி.தருமலிங்கம் | வார்டு எண்.45 |
| உறுப்பினர் | திரு.டி.எ.முருகன் | வார்டு எண்.50 |
| உறுப்பினர் | திருமதி.கே.ஆர்.செல்வி ரவி | வார்டு எண்.11 |

3. **பொதுசுகாதாரக்குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.பி.ரமேஷ் | வார்டு எண்.13 |
| உறுப்பினர் | திரு.கே.கணேசன் | வார்டு எண்.2 |
| உறுப்பினர் | திரு.பி.செல்வம் | வார்டு எண்.35 |
| உறுப்பினர் | திரு.டி.ஏ.முருகன் | வார்டு எண்.50 |
| உறுப்பினர் | திருமதி.ஷகிலா நாராயணன் | வார்டு எண்.27 |
| உறுப்பினர் | திருமதி.கே.லூர்துமேரி | வார்டு எண்.55 |

4. **வரி மற்றும் நிதிக்குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திருமதி.இ.இளவரசி | வார்டு எண்.8 |
| உறுப்பினர் | திரு.ஆர்.கே.நவீன்குமார் | வார்டு எண்.9 |
| உறுப்பினர் | திரு.ஜெ.அயூப் கான் | வார்டு எண்.52 |
| உறுப்பினர் | திருமதி.ஷகிலா நாராயணன் | வார்டு எண்.27 |

| | | |
|---|---|---|
| உறுப்பினர் | திரு.பி.கோதண்டபாணி | வார்டு எண்.29 |
| உறுப்பினர் | திரு.எஸ்.ராஜா | வார்டு எண்.38 |

5. **நகரமைப்பு குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.ஜி.அன்பு | வார்டு எண்.42 |
| உறுப்பினர் | திரு.எஸ்.குப்புசாமி | வார்டு எண்.36 |
| உறுப்பினர் | திரு.ஏ.பிச்சைமுத்து | வார்டு எண்.59 |
| உறுப்பினர் | திரு.ஆர்.கே.நவீன்குமார் | வார்டு எண்.9 |
| உறுப்பினர் | திருமதி.எஸ்.விஜயலட்சுமி | வார்டு எண்.12 |
| உறுப்பினர் | திருமதி.தங்கமணி ஆனந்தன் | வார்டு எண்.25 |

6. **பணிகள் குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.வி.பரத்குமார் | வார்டு எண்.28 |
| உறுப்பினர் | திரு.எஸ்.குப்புசாமி | வார்டு எண்.36 |
| உறுப்பினர் | திருமதி.ஏ.உமாபேபி | வார்டு எண்.5 |
| உறுப்பினர் | திருமதி.எம்.உஷா நந்தினி | வார்டு எண்.54 |
| உறுப்பினர் | திரு.பி.ஆர்.நித்தியகுமார் | வார்டு எண்.15 |
| உறுப்பினர் | திரு.பி.செல்வம் | வார்டு எண்.35 |

| வ. எண் | குழுவின்பெயர் | 01.4.2011 முதல் 31.3.2012 வரை நடந்த கூட்டங்கள் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கணக்குகள் குழு | 1 | 1 |
| 2. | கல்விக் குழு | 4 | 40 |
| 3. | வரி மற்றும் நிதிக்குழு | 4 | 17 |

# 2014-15

**ஆணையாளர்**

திருமதி.பு.ஜானகி இரவீந்திரன் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**பொறியாளர்**

திரு.G.கருணாகரன் : 07.04.2014 முதல் 22.05.2014 வரை
செயற்பொறியாளர் (UGSS)
திரு.T.பாலசுப்பிரமணியன் : 23.05.2014 முதல் 31.03.2015 வரை

**மேலாளர் பொறுப்பு**

திருமதி.N.மலர்விழி,உதவியாளர் : 01.04.2014 முதல் 22.04.2014 வரை
திருமதி.R.K.கனகசுந்தரி,உதவியாளர் : 23.04.2014 முதல் 31.03.2015 வரை

**கணக்கர் பொறுப்பு**

திருமதி.D.வண்ணமலர் இளவரசி, : 01.04.2014 முதல் 31.03.2015 வரை
உதவியாளர்

**நகரமைப்பு அலுவலர்**

திரு.எம்.கண்ணன் : 01.04.2014 முதல் 05.03.2015 வரை
திரு.ஜானகிராமன் : 06.03.2015 முதல் 31.03.2015 வரை

**மாநகர்நல அலுவலர்**

டாக்டர் எஸ்.வசந்த் திவாகர் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

## மண்டலம் - 1

**மண்டல அலுவலர் (பொறுப்பு)**

திரு.P.செல்வகுமார், உதவி பொறியாளர் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**உதவி செயற்பொறியாளர்**

திரு.தென்னரசு, பாதாள சாக்கடை திட்டம் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**உதவி பொறியாளர்**

திரு.P.செல்வகுமார், : 01.04.2014 முதல் 31.03.2015 வரை
மண்டல அலுவலர்(பொ)

**மேலாளர் பொறுப்பு**

திரு.பி.மூர்த்தி, உதவியாளர் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**துப்புரவு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.பாலமுருகன் | : | 01.04.2014 | முதல் | 26.01.2015 | வரை |
| திரு.லூர்துசாமி | : | 27.01.2015 | முதல் | 31.03.2015 | வரை |
| திரு.ஈஸ்வரன் | : | 27.01.2015 | முதல் | 31.03.2015 | வரை |

**நகர் அமைப்பு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.மதிவாணன் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

## மண்டலம் - 2

**மண்டல அலுவலர் (பொ)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.டி.வெங்கடேசன், நகரமைப்பு ஆய்வர் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**உதவி செயற்பொறியாளர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.அசோக்குமார் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**மேலாளர் பொறுப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருமதி.ஜெபகனி பிரபாவதி, உதவியாளர் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**பணி மேற்பார்வையாளர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.செல்வராஜ் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**துப்புரவு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.M.முருகன் | : | 01.04.2014 | முதல் | 25.01.2015 | வரை |
| திரு.A.அப்துல் ரஹிம் | : | 01.04.2014 | முதல் | 25.01.2015 | வரை |
| திரு.K.சிவக்குமார் | : | 27.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |
| திரு.R.சிவக்குமார் | : | 27.01.2015 | முதல் | 31.03.2015 | வரை |

**நகர் அமைப்பு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.டி.வெங்கடேசன், மண்டல அலுவலர்(பொ) | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**வருவாய் ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.பாலசந்திரகுமார், உதவியாளர் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

## மண்டலம் - 3

**மண்டல அலுவலர்(பொ)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.கண்ணன், நகரமைப்பு அலுவலர் | : | 01.04.2014 | முதல் | 06.03.2015 | வரை |
| திருமதி.மலர்விழி, உதவியாளர் | : | 07.03.2015 | முதல் | 31.03.2015 | வரை |

**மேலாளர் பொறுப்பு**

திருமதி.R.K.கனககுந்தரி, உதவியாளர் : 01.04.2014 முதல் 23.04.2014 வரை
திருமதி.மலர்விழி, உதவியாளர் : 24.04.2014 முதல் 31.03.2015 வரை

**இளநிலை பொறியாளர்**

திரு.பழனி : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**துப்புரவு ஆய்வர்**

திரு.சிவக்குமார் : 01.04.2014 முதல் 25.01.2015 வரை
திரு.ஈஸ்வரன் : 01.04.2014 முதல் 25.01.2015 வரை
திரு.A.அப்துல் ரஹிம் : 26.01.2015 முதல் 31.03.2015 வரை
திரு.ப.பாலமுருகன் : 26.01.2015 முதல் 31.03.2015 வரை

**நகர் அமைப்பு ஆய்வர்**

திரு.சீனிவாசன் : 01.02.2014 முதல் 31.03.2015 வரை

**வருவாய் ஆய்வர்**

திரு.சுரேஷ்குமார், உதவியாளர் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

## மண்டலம் - 4

**மண்டல அலுவலர்(பொ)**

திரு.G.கருணாகரன் : 07.04.2014 முதல் 22.05.2014 வரை
செயற்பொறியாளர் (UGSS)
திரு.T.பாலசுப்பிரமணியன், : 23.05.2014 முதல் 31.03.2015 வரை
மாநகர பொறியாளர்

**மேலாளர் பொறுப்பு**

திரு.G.குணசேகரன், உதவியாளர் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**இளநிலை பொறியாளர்**

திரு.செந்தில்குமார் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை

**பணி மேற்பார்வையாளர்**

திரு.ஆறுமுகம் : 01.04.2014 முதல் 31.03.2015 வரை
திரு.சங்கர், டி.மேன் : 01.04.2014 முதல் 05.03.2015 வரை
திரு.செல்வராஜ் : 06.03.2015 முதல் 31.03.2015 வரை

**துப்புரவு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.R.K.கோவிந்தராஜ் | : | 01.04.2014 | முதல் | 31.12.2014 | வரை |
| திரு.லூர்துசாமி | : | 01.04.2014 | முதல் | 25.01.2015 | வரை |
| திரு.சிவக்குமார் | : | 01.04.2014 | முதல் | 26.01.2015 | வரை |
| திரு.M.முருகன் | : | 26.01.2015 | முதல் | 31.03.2015 | வரை |

**வருவாய் ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.தனசேகரன், உதவியாளர் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**நகர் அமைப்பு ஆய்வர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு.மணிகண்டன் | : | 01.04.2014 | முதல் | 31.03.2015 | வரை |

**ஆளுகை**

மைய அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மண்டல அலுவலகப் பணியாளர்களுக்கும் சேர்த்து பொதுப்பிரிவு ஊழியர்கள் அனைவரின் மொத்த சம்பளம் அறிக்கையாண்டில் ரூ.2010.86 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் செலவு ரூ.2361.24 இலட்சம் ஆக இருந்தது. படிவங்கள், எழுது பொருட்கள் முதலியன வாங்கியவகையில் அறிக்கையாண்டில் ரூ.54.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ரூ.40.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கையாயண்டில் புதியதாக உருவாக்கப்பட்ட மண்டல அலுவலகங்களில் நிர்வாக செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் அத்தியாவசிய பணி செலவுகளுக்கு ரூ.50,000/- வரை உச்சபட்ச செலவு மண்டல குழு அனுமதியுடன் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

**சந்தைகள், பேருந்து நிலையங்கள், இருசக்கர வாகனம் நிறுத்துமிடங்கள் மற்றும் மரமகசூல்**

அறிக்கையாண்டில் சந்தைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ.3.65 லட்சங்களும், பேருந்து நிலையங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ.13.91 லட்சங்களும், இரு சக்கர வாகன நிலையம் என்ற தலைப்பின்கீழ் ரூ.23.38 லட்சங்களும் மர மகசூல் என்ற தலைப்பின்கீழ் ரூ.0.15 லட்சங்களும் வசூல் ஆகியுள்ளது.

**சந்தைகள்:**

நேதாஜி சந்தை, சலவன்பேட்டை சந்தை, மீன் இறைச்சி சந்தைகள் இவ்வாண்டில் தொடர்ந்து நடைபெற்று வந்தன. சந்தையிலுள்ள தற்காலிக கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை பொது ஏலத்தில் விடப்பட்டது. நிரந்தர கடைகளில் வாடகை வசூல் நகராட்சி பணியாளர் மூலம் தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

**லாரி நிலையம்:**

பெங்களூர் சாலை – பைபாஸ் சாலை கூடுமிடத்தில் உள்ள வண்டிமேட்டில் லாரி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் கடைகளும், லாரி கூடுமிடமும் வேண்டிய நீர் வசதி, விளக்கு வசதி, கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி லாரி ஸ்டாண்டு மூலம் ரூ.660233/- மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்கிறது.

**ஆடு, மாடு அடிக்கும் இடம்:**

மாமன்றம் இரண்டு தொட்டிகளை நடத்தி வருகின்றது. ஒன்று ஆட்டிற்கும், மற்றொன்று மாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கட்டணம் வசூல் செய்யும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டு வருமானம் ரூ.400422/- ஆகும்.

**வரி இனங்கள் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை, நடப்பு, கேட்பு, வசூல் விவரம் இலட்சத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது**

| | **கேட்பு** | **வசூல்** | **நிலுவை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| **வரியினங்கள் (நிலுவை)** | 1989.39 | 421.67 | 1567.71 | 21.19 |
| **வரியினங்கள் (நடப்பு)** | 2118.9 | 1584.4 | 534.5 | 74.77 |
| **வரியில்லா இனங்கள் (நிலுவை)** | 492.30 | 102.62 | 389.67 | 20.85 |
| **வரியில்லா இனங்கள் (நடப்பு)** | 465.31 | 245.65 | 219.66 | 52.79 |

**வருவாய் பிரிவு**

இம்மாநகராட்சியில் வருவாய் அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. நான்கு வருவாய் ஆய்வாளர்கள், ஒரு சந்தை கண்காணிப்பாளர் மற்றும் 14 வருவாய் உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

## 1. வரியில்லா இனங்கள்

| | | |
|---|---|---|
| சாரதி மாளிகை கடைகள் | : | 253 |
| நேதாஜி மார்கெட் கடைகள் | : | 734 |
| பர்மா பஜார் கடைகள் | : | 61 |
| பழைய பேருந்து நிலைய கடைகள் | : | 54 |
| புதிய பேருந்து நிலைய கடைகள் | : | 24 |
| மற்ற பகுதியில் உள்ள கடைகள் | : | 382 |
| **மொத்த கடைகள்** | **:** | **1508** |

## 2. பேருந்து நிலையங்கள் - 3

| |
|---|
| 1. புதிய பேருந்து நிலையம் |
| 2. பழைய பேருந்து நிலையம் |
| 3. தாராபடவேடு பேருந்து நிலையம் |

## 3. சந்தைகள்

| |
|---|
| 1. நேதாஜி சந்தை |
| 2. சலவன்பேட்டை சந்தை |
| 3. புதிய மீன் இறைச்சி சந்தை |

## 4. கட்டண கழிப்பிடங்கள்

| | | |
|---|---|---|
| புதிய பேருந்து நிலைய கழிப்பிடங்கள் | : | 6 |
| பழைய பேருந்து நிலைய கழிப்பிடங்கள் | : | 2 |
| பழைய மாநகராட்சி எதிரில் உள்ள கழிப்பிடங்கள் | : | 1 |
| நேதாஜி மார்கெட் கழிப்பிடம் | : | 1 |
| பாகாயம் கட்டண கழிப்பிடம் | : | 1 |
| சத்துவாச்சாரி கட்டண கழிப்பிடம் | : | 2 |
| **மொத்த கடைகள்** | **:** | **13** |

### 5.இரு சக்கர வாகன நிறுத்துமிடம்

| | | |
|---|---|---|
| புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிடம் | : | 3 |
| பழைய பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிடம் | : | 1 |
| பழைய மீன் மார்கெட் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் | : | 1 |
| காட்பாடி காந்திநகர் இரு சக்கர வாகன நிறுத்துமிடம | : | 2 |
| **மொத்த கடைகள்** | : | **7** |

### 6. சமுதாய கூடங்கள்

சமுதாய கூடங்கள் மெத்தம் 13 உள்ளன.

### 7. கல்யாண மண்டபம்

பில்டர்பெட் ரோடில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான மஹாராஜா கல்யாண மண்டபம் உள்ளது.

## கணக்குகள் பிரிவு

ஒருங்கிணைந்த மாநகராட்சி கணக்குகள் மண்டல அலுவலகங்கள் கணக்குகள் தயார் செய்யப்பட்டு வரப்படுகிறது. 2014-15-ன் உத்தேச வரவு செலவு திட்டம் இம்மாமன்ற தீர்மானம் எண்.311 நாள்: 07.07.2014-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டின் வரவு - ரு.14971.45 லட்சம்

அறிக்கை ஆண்டின் செலவு - ரு.15352.80 லட்சம்

கடன் தொகையில் பாதாள சாக்கடை திட்ட கடன் தொகைக்கு வட்டி ரு.73.40 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. கடன் தொகை திரும்ப செலுத்தப்படவில்லை.

## கல்வி

01.04.1990 முதல் நகராட்சி துவக்க பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளிகள் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கட்டிடங்கள் மட்டும் பழைய வேலூர் மாநகராட்சியில் இயங்கி வந்தன.

இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் உள்ள கீழ்கண்ட பள்ளிகள் பெயர் மாற்றம் மற்றும் மாநகாராட்சி வசம் ஒப்படைக்க கோரி கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பழைய நகராட்சியில் 36 ஆரம்ப பள்ளிகள், 3 உயர்நிலை பள்ளிகள் மற்றும் 2 மேல்நிலை பள்ளிகள் உள்ளன. இவற்றில் பயிலும் மாணவ மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர். பயன் பெறுபவர்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆரம்பப்பள்ளி | : | 2658 |
| உயர்நிலைப்பள்ளி | : | 380 |
| மேல்நிலைப்பள்ளி | : | 434 |
| மொத்தம் | : | 3472 |

**இம்மையங்களில் பணிபுரிவோர் விவரம் பின்வருமாறு:**

| வ.எண் | விவரம் | அமைப்பாளர் | ஊதவியாளர் | சமையலர் |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்பப்பள்ளி | 23 | 15 | 29 |
| 2. | உயர்நிலைப்பள்ளி | 02 | 02 | 02 |
| 3. | மேல்நிலைப்பள்ளி | 03 | 02 | 02 |
| | **மொத்தம்** | **28** | **19** | **33** |

பிரதி மாதமும் உணவு மையங்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருட்கள் தமிழ்நாடு உணவுப்பொருட்கள் வழங்கு துறை, மூலம் அந்தந்த பள்ளி உணவு மையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயன் பெறும் மாணவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு அரசு மான்யம் பருப்பு பயன்படுத்தும் நாளில் ரூ.1.30 பைசா (ம) பருப்பு பயன்படுத்தாத நாளில் ரூ.1.70 பைசா (ம) 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயன் பெறும் மாணவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1.80 பைசாவும் அரசாணை எண் 49 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி1) துறை நாள் 17.04.2013-ன்படி 01.05.2013-ந் தேதி முதல் செலவிடப்படுகின்றது. மேலும் உருளைக்கிழங்கு மான்யம் ஒருவருக்கு 0.40 காசு செலவிடப்படுகிறது. பிரதி வாரந்தோறும் உணவுடன் முட்டை

வழங்கப்படுகின்றது. மேலும் கொண்டை கடலை மற்றும் பச்சை பயிறு 15 நாட்களுக்கு ஒருமுறை மாற்று வாராந்திர முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசாணை நிலை எண் 267 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி) துறை நாள் 01.11.2012-ன் படியும், மாவட்ட ஆட்சி தலைவர், சத்துணவு பிரிவு வேலூர் அவர்களின் சேமிப்பு தந்தி ந.க.எண்.5362 நாள்.01.09.2014 படியும் கீழ்கண்டவாறு 24.09.2014 முதல் கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

1. **முதல் வாரம் மற்றும் மூன்றாவது வாரத்திற்கான உணவு வகைகள்**

| **வ.எண்** | **கிழமை** | | **உணவு வகைகள்** |
|---|---|---|---|
| 1. | திங்கட்கிழமை | - | காய்கறி பிரியாணி + மிளகு கலந்த முட்டை |
| 2. | செவ்வாய்கிழமை | - | கொண்டைக்கடலை புலாவ் + தக்காளி முட்டை மசாலா |
| 3. | புதன்கிழமை | - | தக்காளி சாதம் + மிளகு கலந்த முட்டை |
| 4. | வியாழக்கிழமை | - | சாதம் + சாம்பார் + வேகவைத்த முட்டை |
| 5. | வெள்ளிகிழமை | - | கறிவேப்பிலை சாதம் அல்லது கீரை சாதம் + மசாலா முட்டை + மிளகில் வறுத்த உருளைக்கிழங்கு |

2. **இரண்டாவது வாரம் மற்றும் நான்காவது வாரத்திற்கான உணவு வகைகள்**

| **வ.எண்** | **கிழமை** | | **உணவு வகைகள்** |
|---|---|---|---|
| 1. | திங்கட்கிழமை | - | சாம்பார் சாதம் (Bisibelabath) + வெங்காயம் தக்காளி கலந்த முட்டை |
| 2. | செவ்வாய்கிழமை | - | மீல் மேக்கர் கலவை மற்றும் காய்கறி சாதம் + மிளகு கலந்த முட்டை |
| 3. | புதன்கிழமை | - | புளிசாதம் + தக்காளி முட்டை மசாலா |
| 4. | வியாழக்கிழமை | - | எலுமிச்சை சாதம் + பச்சை பயறு சுண்டல் + தக்காளி கலந்த முட்டை |
| 5. | வெள்ளிகிழமை | - | சாதம் + சாம்பார் + வேகவைத்த முட்டை + வறுத்த உருளைக்கிழங்கு |

பள்ளி சத்துணவு மையங்களுக்கு பார்வையிட களப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மையங்களை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு மத்திய சத்துணவு திட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து பள்ளிக் குழந்தைகள் பசி நீக்கி கல்வி பணியில பேருதவியாக உள்ளது. ஆரம்ப பள்ளி பயிலும் மத்திய உணவு உட்கொள்ளும் 2839 மாணவ/ மாணவியர்களுக்கு இலவச புத்தகம் மற்றும் சீருடை, காலணி முதன்மை கல்வி அலுவலர் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. காய்கறி, விறகு, உருளைக் கிழங்கு மற்றும் இதர செலவினங்களுக்கு அறிக்கை ஆண்டில் ரு.9,83,108/-. செலவிடப்பட்டுள்ளது. மேற்படி காலத்தில் சத்துணவு பணியாளர்களுக்கு ரூ.57,91,656/-. தொகுப்பூதியமாக வழங்கப்பட்டுள்ளது, உதவியாளர் மற்றும் கணக்கர் சம்பளமாக ரூ.385095/- செலவிடப்பட்டது. ஆக இத்திட்டத்தின் கீழ் அறிக்கையாண்டில் மொத்த செலவு தொகை ரூ.7159860/- ஆகும்.

| பணியாளர் விவரம் | ஊதியம் | தர ஊதியம் | அகவிலைப்படி | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமைப்பாளர் | 2500 | 500 | 2527 | 5527 |
| சமையலர் | 1300 | 300 | 1327 | 2927 |
| உதவியாளர் | 950 | 200 | 968 | 2118 |

இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் உள்ள பள்ளிகளின் சத்துணவு திட்டம் வட்டார வளர்ச்சி அலுவலரின் பராமரிப்பின் கீழ் வருகிறது.

**மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பள்ளிகளின் விவரம் 2014–15**

| வ.எண் | பள்ளிகளின் விவரம் |
|---|---|
| | **ஆரம்பப் பள்ளி** |
| 1 | அருகந்தம்பூண்டி ஆரம்பப் பள்ளி |
| 2 | தோட்டப்பாளையம் ஆரம்பப் பள்ளி |
| 3 | கஸ்பா அப்பாதுரை ஆரம்பப் பள்ளி |
| 4 | கஸ்பா சென்ட்ரல் ஆரம்பப் பள்ளி |
| 5 | இராம், பிள்ளையார் கோயில் ஆரம்பப் பள்ளி |

| | |
|---|---|
| 6 | இராம், இந்து ஆரம்பப் பள்ளி |
| 7 | பெருமாள் கவுண்டன் தெரு, ஆரம்பப் பள்ளி |
| 8 | பி.எம்.செட்டி ஆரம்பப் பள்ளி |
| 9 | சின்னண்ண மேஸ்திரி ஆரம்பப் பள்ளி |
| 10 | சுக்கைய்ய வாத்தியார் ஆரம்பப் பள்ளி |
| 11 | காந்திரோடு ஆரம்பப் பள்ளி |
| 12 | அம்மகாரத் தெரு, ஆரம்பப் பள்ளி |
| 13 | லாங்கு பஜார் ஆரம்பப் பள்ளி |
| 14 | எஸ்.எஸ். கோயில் ஆரம்பப் பள்ளி |
| 15 | மானம் பார்த்த ஜமேதார் ஆரம்பப் பள்ளி |
| 16 | **கோலக்காரன்** தெரு, ஆரம்பப் பள்ளி |
| 17 | மாசிலாமணி ஆரம்பப் பள்ளி |
| 18 | சலவன்பெட்டை ஆரம்பப் பள்ளி |
| 19 | பாட்டைத் தெரு, ஆரம்பப் பள்ளி |
| 20 | தாண்டவராயன் தெரு, ஆரம்பப் பள்ளி |
| 21 | கன்சால்பேட்டை உருது ஆரம்பப் பள்ளி |
| 22 | கஸ்பா முஸ்லீம் உருது ஆரம்பப் பள்ளி |
| 23 | அப்துல்லாகான் ஆரம்பப் பள்ளி |
| 24 | டிட்டர்லைன் உருது ஆரம்பப் பள்ளி |
| 25 | காசிம் குமுந்தான் உருது ஆரம்பப் பள்ளி |
| 26 | ரீபால் உருது முஸ்லீம் ஆரம்பப் பள்ளி |
| 27 | ஆஸ்பத்திரி முத்துவீதி ஆரம்பப் பள்ளி |
| 28 | மெயின் பஸார் உருது ஆரம்பப் பள்ளி |
| | **நடு நிலைப் பள்ளி** |
| 29 | எட்டியம்மன் கோாயில் நடுநிலைப் பள்ளி |
| 30 | மெயின் பஸார் இந்து நடுநிலைப் பள்ளி |
| 31 | மொய்தீன்கான் உருது நடுநிலைப் பள்ளி |
| 32 | **காகிதப்பட்டடை** நடுநிலைப் பள்ளி |
| 33 | கலாஸ்பாளையம் நடுநிலைப் பள்ளி |
| 34 | டாக்டர் அம்பேத்கர் நடுநிலைப் பள்ளி |
| 35 | எடத்தெரு நடுநிலைப் பள்ளி |
| 36 | பூஷணம் நகர் நடுநிலைப் பள்ளி |
| | **உயர் நிலைப் பள்ளி** |
| 37 | சலவன்பேட்டை உயர்நிலைப் பள்ளி |
| 38 | மார்க்கெட் உயர்நிலைப் பள்ளி |
| 39 | கஸ்பா உயர்நிலைப் பள்ளி |
| | **மேல் நிலைப் பள்ளி** |
| 40 | சைதாப்பேட்டை மேல்நிலைப் பள்ளி |
| 41 | தோட்டப்பாளையம் மகளிர் மேல்நிலைப் பள்ளி |

**மாநகராட்சியில் இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் உள்ள பள்ளிகளை பெயர் மாற்றம் (ம) மாநகராட்சி வசம் ஒப்படைக்கக் கோரி கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது 2014–15**

| வ.எண் | பள்ளிகளின் விவரம் |
|---|---|
| | **ஆரம்பப் பள்ளி** |
| 1 | கல்புதூர் ஆரம்பப் பள்ளி |
| 2 | வ.ஊ.சி பூங்கா ஆரம்பப் பள்ளி |
| 3 | வி.ஜி.ராவ் நகர்ஆரம்பப் பள்ளி |
| 4 | கீழ்மோட்டூர் ஆரம்பப் பள்ளி |
| 5 | பெரிய புதுர் ஆரம்பப் பள்ளி |
| 6 | அசோக் நகர் ஆரம்பப் பள்ளி |
| 7 | **கசம்** ஆரம்பப் பள்ளி |
| 8 | திருவள்ளுவர் நகர் ஆரம்பப் பள்ளி |
| 9 | காந்தி நகர் கிழக்கு ஆரம்பப் பள்ளி |
| 10 | காந்தி நகர் மேற்கு ஆரம்பப் பள்ளி |
| 11 | காங்கேயநல்லூர் ஆரம்பப் பள்ளி |
| 12 | ஜாஹிர் உசேன் தெரு, விருதம்பட்டு ஆரம்பப் பள்ளி |
| 13 | சத்துவாச்சாரி மேற்கு ஆரம்பப் பள்ளி |
| 14 | ரங்காபுரம் ஆரம்பப் பள்ளி |
| 15 | போஸ்டல் நகர் அலமேலுமங்காபுரம் ஆரம்பப் பள்ளி |
| 16 | இந்திரா நகர் சத்துவாச்சாரி ஆரம்பப் பள்ளி |
| 17 | மூலக்கொல்லை ஆரம்பப் பள்ளி |
| 18 | வ.ஊ.சி நகர், அல்லாபுரம் ஆரம்பப் பள்ளி |
| 19 | கன்னிகாபுரம் ஆரம்பப் பள்ளி |
| 20 | பள்ள இடயன்சாத்து ஆரம்பப் பள்ளி |
| 21 | குளவிமேடு ஆரம்பப் பள்ளி |
| 22 | அல்லாபுரம் ஆரம்பப் பள்ளி |
| 23 | இடையன்சாத்து ஆரம்பப் பள்ளி |
| 24 | கொணவட்டம் இந்து ஆரம்பப் பள்ளி |
| 25 | கொணவட்டம் முஸ்லிம் ஆரம்பப் பள்ளி |
| 26 | அரியூர் இந்து ஆரம்பப் பள்ளி |
| 27 | அரியூர் முஸ்லிம் ஆரம்பப்பள்ளி |
| | **நடு நிலைப் பள்ளி** |
| 28 | செங்குட்டை, தாராபடவேடு நடுநிலைப் பள்ளி |
| 29 | குளக்கரை தாராபடவேடு நடுநிலைப் பள்ளி |
| 30 | பள்ளிக்குப்பம் காட்பாடி நடுநிலைப் பள்ளி |
| 31 | காட்பாடி நடு நிலைப் பள்ளி |
| 32 | பாரதியார் கிளை கழிஞ்சூர் நடுநிலைப் பள்ளி |
| 33 | மோட்டூர் நடுநிலைப் பள்ளி |

| | |
|---|---|
| 34 | அருப்புமேடு நடுநிலைப் பள்ளி |
| 35 | அம்பேத்கார் நகர் நடுநிலைப் பள்ளி |
| 36 | வ.ஊ.சி நகர் சத்துவாச்சாரி நடுநிலைப் பள்ளி |
| 37 | சத்துவாச்சாரி கிழக்கு நடுநிலைப் பள்ளி |
| 38 | பாகாயம் நடுநிலைப் பள்ளி |
| 39 | பலவன்சாத்து நடுநிலைப் பள்ளி |
| 40 | சாயிநாதபுரம் நடுநிலைப் பள்ளி |
| | **மேல்நிலைப்பள்ளி** |
| 41 | விருபாட்சிபுரம் மேல்நிலைப் பள்ளி |

**<u>நூல் நிலையம்</u>**

மாநகரின் உள்ளூர் நூலக ஆணைக் குழுவினரால் மத்தில் நூலகம் நடத்தப்படுகின்றது. மாநகராட்சி சொத்து வரியுடன் வசூலிக்கும் நூல் நிலையக் கட்டணம் அறிக்கை ஆண்டில் ரூ96,07,196/-

இது தவிர மாநகராட்சி பொது நூல் நிலையம் ஒன்றையும், நான்கு வாசக சாலைகளும் தொடர்ச்சியாக அறிக்கை ஆண்டில் நல்ல முறையில் நடத்தப்பட்டது. காந்தி நினைவு நூலகம் என்று அழைக்கப்படும் பொது நூலகம் பதிவுரு எழுத்தர் பொறுப்பிலும் நான்கு வாசக சாலைகள் காவலர்கள் பொறுப்பிலும் உள்ளது.

**<u>திட்டப்பணிகள் விவரம்:</u>**

1. **ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம்:**

2014-15 திட்டத்தின் கீழ் சாலை பணிகள் அமைக்க முழு மானியமாக ரூ.7.73 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு மேற்கொள்ளப்படும்.

**அ) சாலை பணிகள்:**

தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.7.73 கோடி மதிப்பீட்டில் 47 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் 47 பணிகள் முடிக்கப்பட்டது. அதற்கான செலவிடப்பட்ட தொகை ரூ.7.73 கோடி ஆகும்.

## 2. இடைவெளி நிரப்பும் நிதி திட்டம்:

**அ)** வேலூர் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடம் மண்டலம் 2-ல் அமைக்கும் பணிக்கு ரூ.2.00கோடி மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் தரைதளம் முடிக்கப்பட்டது. மேலும் நீதிமன்றத்தில் வழக்கில் உள்ளதால் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**ஆ) குடிநீர் பணிகள்:**

குடிநீர் மேம்பாட்டு பணிக்கு ரூ.8.74கோடி மதிப்பீட்டில் 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.8.74கோடி ஆகும்.

**இ) சுடுகாடு அபிவிருத்தி:**

சுடுகாடு அபிவிருத்தி மேம்பாட்டு பணிக்கு ரூ.0.70கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.0.70 கோடி ஆகும்.

## 3. உட்கட்டமைப்பு நிறப்பு நிதி திட்டம்:

**அ) கழிப்பிடம்:**

வேலூர் மாநகராட்சி 23 பகுதிகளில் கழிப்பிடம் பணிக்கு ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் 23 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.4.37கோடி ஆகும்.

## 4. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2014-15 கழிப்பிடம் பராமரிப்பு பணிகள்:

வேலூர் மாநகராட்சி பகுதிகளில் கழிப்பிடம் பராமரிப்பு பணிக்கு ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் 25 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.0.75 கோடி ஆகும்.

**5. பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் (வேலூர் தொகுதி):**

பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் உயர்மின் கோபுர விளக்கு, சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.40.00இலட்சம் மதிப்பீட்டில் 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் 5 பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்கான செலவிடப்பட்ட தொகை ரூ.40.00 இலட்சமாகும்.

**6. பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் ( அரக்கோணம் தொகுதி):**

பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.13.00இலட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.13.00 இலட்சமாகும்

**7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ( வேலூர் தொகுதி):**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் பள்ளி கட்டிடத்திற்கு மேசை மற்றும் நாற்காலி உபகரணங்கள் பணிகள் மேற்கொள்ள ரூ.9.00இலட்சம் மதிப்பீட்டில் 3 பணடிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.9.00இலட்சமாகும்.

**8. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ( காட்பாடி தொகுதி):**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் சமுதாய கூடம், அங்கன்வாடி, மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் பணிகள் மேற்கொள்ள ரூ.80.82இலட்சம் மதிப்பீட்டில் 11 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டது. அதற்கான செலவிடப்பட்ட தொகை ரூ.80.82இலட்சம் ஆகும்.

**9. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ( அணைக்கட்டு):**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் சுடுகாடு அபிவிருத்தி பணி மேற்கொள்ள ரூ.35.00இலட்சம் மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஆண்டில் 1 பணிகளும் முடிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.35.00 இலட்சமாகும்.

**குடிநீர் விநியோகம்**

**தற்போதைய குடிநீர் விநியோக விவரம்**

**வேலூர் மாநகராட்சி – குடிநீர் விவர குறிப்பு**

- வேலூர் மாநகராட்சி மொத்த மக்கள் தொகை : 5,40,302
- வேலூர் மாநகராட்சி மொத்த பரப்பளவு : 87.92 ச.கி.மீ.
- வேலூர் மாநகராட்சியில் தற்போது வழங்கப்பட வேண்டிய மொத்த குடிநீர் அளவு : 72.94 MLD
- தற்போது வழங்கப்படும் மொத்த குடிநீர் அளவு : 34.94 MLD
- குடிநீர் பற்றாக்குறை : 38.00 MLD
- ஒரு நபருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு : 45 முதல் 109 LPCD
- குடிநீர் வழங்கப்படும் நாட்கள் விவரம் : 2 முதல் 5 நாட்களுக்கு ஒருமுறை
- மாநகராட்சியில் தற்போது மொத்தமுள்ள ஆழ்துளைகிணறு எண்ணிக்கை : 1183 எண்கள்
- மாநகராட்சியில் தற்போது மொத்தமுள்ள மினிபவர் பம்பு எண்ணிக்கை : 1246 எண்கள்
- மாநகராட்சியில் தற்போது மொத்தமுள்ள பவர் பம்பு எண்ணிக்கை : எண்கள்
- திறந்த வெளி கிணறுகளின் மொத்த எண்ணிக்கை : 55 எண்கள்

**வேலூர் மாநகராட்சியின் குடிநீர் நீரேற்று நிலையங்கள்**

**மண்டலம்-1**

**தண்டல கிருஷ்ணாபுரம் தலைமை நீரேற்று நிலையம்**

தண்டல கிருஷ்ணாபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் 4 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் உள்ளது. அதில் 2 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. நீர்உறிஞ்சி கிணறுகள் மூலம் குடிநீர் சேகரிக்கப்பட்டு காங்கேயநல்லூர், விருதம்பட்டு, காந்திநகர், ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் 5.00 லட்சம் லிட்டர் நிரேற்றம் செய்யப்பட்டது.

**தலையாரம்பட்டு தலைமை நீரேற்று நிலையம்**

தலையாரம்பட்டு தலைமை நீரேற்று நிலையத்தில் 6 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளும் உள்ளது. இவற்றில் நீர்மட்டம் இல்லாமையால் குடிநீர் நீரேற்றம் செய்ய இயலவில்லை.

**TNHB (திருமணி) தலைமை நீரேற்று நிலையம்**

TNHB (திருமணி) தலைமை நீரேற்று நிலையத்தில் நான்கு எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகளில் இரண்டு எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. நீர்உறிஞ்சி கிணறுகள் மூலம் குடிநீர் சேகரிக்கப்பட்டு தினசரி 5.00 இலட்சம் லிட்டர் சராசரியாக குடிநீரேற்றம் செய்யப்பட்டது.

**அம்முண்டிபட்டரை (திருமணி) தலைமை நீரேற்று நிலையம்**

அம்முண்டிபட்டரை (திருமணி) தலைமை நீரேற்று நிலையத்தில் 5 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 5 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் உள்ளது. இவற்றில் 3 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 4 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 3.00 லட்சம் லிட்டர் காட்பாடி பகுதிக்கு குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**இறைவன்காடு தலைமை நீரேற்று நிலையம்**

இறைவன்காடு தலைமை நீரேற்று நிலையத்தில் 7 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 18 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் உள்ளது. இவற்றில் 2 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலமாக தினசரி சராசரியாக மண்டலம்-1 பகுதிக்கு 6.00 லட்சம் லிட்டர் மற்றும் மண்டலம்-4 பகுதிக்கு 6.00 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**மண்டலம்-2**

**பொன்னை தலைமை நீரேற்று நிலையம்**

பொன்னை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 10 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 29 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் உள்ளது. இவற்றில் 6 நீர்உறிஞ்சி கிணறுகள் மற்றும் 27 ஆழ்துளை கிணறுகள் அனைத்தும் பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் தினசரி சராசரியாக 96.00 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**அலமேலுமங்காபுரம் - வெங்கடாபுரம் தலைமை நீரேற்று நிலையம்**

அலமேலுமங்காபுரம் - வெங்கடாபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஒரு எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறும் மற்றும் 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறும் உள்ளது. இவற்றில் அனைத்தும் பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் தினசரி சராசரியாக 2.00 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**மண்டலம்-3**

**ஓட்டேரி தலைமை நீரேற்று நிலையம்**

ஓட்டேரி தலைமை நீரேற்று நிலையத்தில் நீர்த் தேக்கத்தில் 18 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் 4 எண்ணிக்கை திறந்த வெளி கிணறுகள் உள்ளது. இவற்றில் 6 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் 2 எண்ணிக்கை திறந்தவெளி கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் தினசரி சராசரியாக 3.00 இலட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**மண்டலம்-4**

**பாலாறு தலைமை நீரேற்று நிலையம்**

பாலாறு தலைமை நீரேற்று நிலையத்தில் 5 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறும் மற்றும் 7 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் உள்ளது. இவற்றில் 3 எண்ணிக்கை மற்றும் 4 எண்ணிக்கை ஆழ்துளை கிணறும் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் சராசரியாக 20.00 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**கீழ்மொணவூர் தலைமை நீரேற்று நிலையம்**

கீழ்மொணவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 5 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறும் மற்றும் 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு உள்ளது. இவற்றில் 2 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. இதன் முலம் தினசரி சராசரியாக 2.00 லட்சம் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**கருகம்பத்தூர் தலைமை நீரேற்று நிலையம்**

கருகம்பத்தூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் 6 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறு மற்றும் 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் உள்ளது. இவற்றில் 2 எண்ணிக்கை நீர்உறிஞ்சி கிணறு மற்றும் 9 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. இதன் முலம் தினசரி சராசரியாக 6.00 இலட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டது.

**மாநகராட்சிக்கு சொந்தமான நீர்தேக்க தொட்டிகளின் கொள்ளளவு விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பில்டர்பெட் கீழ்மட்ட நீர்த்தேக்க தொட்டி | : | 20 இலட்சம் |
| 2 | பில்டர்பெட் மேல்மட்ட நீர்த்தேக்க தொட்டி | : | 19 இலட்சம் |
| 3 | சங்கரன்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | : | 15 இலட்சம் |
| 4 | பாரதியார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | : | 10 இலட்சம் |
| 5 | சைதாப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | : | 10 இலட்சம் |
| 6 | வசந்தபுரம் | : | 5 இலட்சம் |
| 7 | புண்ணியக்கோட்டி | : | 6 இலட்சம் |
| 8 | அருகந்தப்பூண்டி | : | 5 இலட்சம் |
| 9 | காகிதப்பட்டரை | : | 2 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | எஸ்.ஆர்.எம். நகர் | : | 6 இலட்சம் |
| 11 | பாரதி நகர் | : | 3 இலட்சம் |
| 12 | வ.ஊ.சி பார்க் | : | 2 இலட்சம் |
| 13 | நேரு பார்க் | : | 3 இலட்சம் |
| 14 | கழிஞ்சூர் மெயின் ரோடு | : | 2.50 இலட்சம் |
| 15 | கழிஞ்சூர் ஓல்ட் டவுன் பஞ்சாயத்து அலுவலகம் | : | 6 இலட்சம் |

**நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் விவரம்**

| வ. எண். | நிலையத்தின் பெயர் | | 2014-15ல் பெறப்பட்ட சராசரி குடிநீர் அளவு (லட்சம் லிட்டர்) |
|---|---|---|---|
| 1 | பாலாறு தலைமை நீரேற்று நிலையம் | : | 20.00 |
| 2 | கருகம்பத்தூர் நீரேற்று நிலையம் | : | 6.00 |
| 3 | பொன்னை கூட்டு குடிநீர் திட்டம் (தெங்கால்) | : | 96.00 |
| 4 | ஓட்டேரி நீர்த்தேக்கம் | : | 3.00 |
| 5 | இறைவன்காடு தலைமை நீரேற்று நிலையம் | : | 12.00 |
| 6 | திருமணி தலைமை நீரேற்று நிலையம் | : | 3.00 |
| 7 | தலையாரம்பட்டு தலைமை நீரேற்று நிலையம் | : | 0.00 |
| 8 | தண்டல கிருஷ்ணாபுரம் தலைமை நீரேற்று நிலையம் | : | 5.00 |
| 9 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தலைமை நீரேற்று நிலையம் | : | 5.00 |
| 10 | அலமேலுமங்காபுரம் -வெங்கடாபுரம் கூட்டு குடிநீர் தலைமை நீரேற்றம் | : | 2.00 |
| 11 | கீழ்மொணவூர் தலைமை நீரேற்று நிலையம் | : | 2.00 |
| | **மொத்தம்** | | **154.00** |

**மொத்த குடிநீர் விநியோக விவரம்**

I. தலைமை நீரேற்று நிலையம் மூலம் குடிநீர் விநியோகம் : 15.40 MLD

II. சிறுவிசை மின் மோட்டார் (ம) பவர்பம்பு மூலம் குடிநீர் விநியோகம் : 4.82 MLD

III. கைபம்பு மூலம் குடிநீர் விநியோகம் : 0.24 MLD

IV. குடிநீர் லாரி மூலம் விநியோகம் : 1.50 MLD

------------------------

மொத்த குடிநீர் விநியோகம் : 21.96 MLD

------------------------

| | | |
|---|---|---|
| 1.மாநகராட்சி | : | வேலூர் மாநகாட்சி |
| 2.பரப்பளவு | : | 87.915 சதுர கி.மீ |
| 3.மக்கள் தொகை | : | 5,40,302 |
| 4.வார்டு | : | 60 |
| 5.குடிநீர் குழாய் இணைப்பு வீட்டு உபயோகம் | : | 53985 |
| 6.வீட்டு உபயோம் இல்லாதது | : | 200 |
| 7.பொது குடிநீர் குழாய் | : | 4412 |
| 8.தினசரி பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு | : | 45 முதல் 115 லிட்டர் வரை நபர் ஒருவருக்கு |
| 9.கைபம்புடன் கூடிய ஆழ்துளை கிணறுகள் | : | 1183 |

**<u>தெரு விளக்குகள்</u>**

வேலூர் மாநகராட்சி வார்டு 1 முதல் 60 வரை உள்ள பகுதிகளில் 20527 எண்ணிக்கை தெருவிளக்குகள் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் பங்காளிப்புடன் (PPP) கூடிய தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் IUDM திட்டத்தின் கீழ் ரூ.20.86 கோடி மதிப்பீட்டில் 2014ம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 40W குழல் விளக்குகள் 11452 எண்ணிக்கைக்கு பதிலாக புதியதாக மின்னாற்றல் சேமிப்புடன் கூடிய 15 / 20W LED விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் புதியதாக 2000 எண்ணிக்கை 15 / 20W LED விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளன. SVL / MHL / CFL விளக்குகள் 6539 எண்ணிக்கை உள்ளன. சாதாரண ஸ்ட்சுகள் மூலம் இயக்கப்பட்டு வந்த தெரு விளக்குகள் தானியங்கி ஸ்ட்சுகளாக 225 எண்ணிக்கை மற்றும் வோல்ட்டேஜ் கான்ரோலர்கள் 874 எண்ணிக்கை பொறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உள்ள அனைத்து விளக்குகளையும் கண்காணிக்கவும் மின் சேமிப்பு குறியீடுகளை அறிந்து கொள்ளவும் மைய கண்காணிப்பு மற்றும் கட்டுபாடு கருவி (CCMC) நிறுவப்பட்டுள்ளது. இத்திட்ட ஒப்பந்தப்படி 40.50% மின்னாற்றல் சேமிக்க உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பு மின் சேமிப்பு 43.96%ம் ஓர் ஆண்டிற்கு ரூ.1.93 கோடி மின் கட்டணம் சேமிக்கப்பட்டுள்ளது. இதனை மூன்றாம் நபர் தர ஆய்வு நிறுவனம் TUV SUD South Asia Pvt. Ltd., Chennai நிறுவனம் ஆய்வு செய்து சான்றிக்கை பெறப்பட்டுள்ளது.

**சங்கு (SIRAN) ஒலித்தல்:**

பொது மக்கள் நேரம் அறிந்து கொள்ள தினமும் 6 முறைகள், காலை 5.00 மணி, 9.30 மணி, நடுப்பகல் 12 மணி, 1 மணி, மாலை 4 மணி மற்றும் இரவு 7 மணி ஆக ஆறு முறைகள் ஒலிக்கப்படுகிறது. இந்து மக்கள் வசதிக்காக மார்கழி மாதம் விடியற்காலை 3 மணிக்கு சங்கு ஒலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மேலும் ரம்ஜான் தொழுகைக்காக விடியற்காலை 3 மணிக்கு சங்கு ஒலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

**பாதாள சாக்கடை திட்டம்**

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் **2** பகுதிகளாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதில் முதல் கட்டமாக பகுதி **–1** –ல் **24** வார்டுகளில் பணி நடைபெற்று வருகிறது.

அரசாணை எண்.(டி)**19**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA3) நாள்.**19.12.2005**–ல் இத்திட்டத்தை **30.00** கோடியில் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டது. பின்னர் திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல் ரூ.**40.49** கோடியில் செயல்படுத்த அரசு ஆணை எண். (டி) **555** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**30.12.2009**–ல் வழங்கப்பட்டது.

**பகுதி 1–ல்** பணிகள் கீழ்க்கண்டவாறு மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணி உத்திரவு **25.02.2009**ல் வழங்கப் பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

**சிப்பம் 1**–ல் பணிகள் ரூ.**13.94** கோடிக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இதில் மொத்தம் **1311** ஆள் நுழைவாயில் கட்ட வேண்டிய பணியில் **1028** ஆள் நுழைவாயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் குழாய் பதிக்கும் பணியில் மொத்தம் **33.910 கி.மீ.** நீளத்தில் **20.929** கி.மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. **8000** எண்ணிக்கை வீட்டு கழிவுநீர் இணைப்புகள் கொடுக்க வேண்டிய பணியில் இதுவரை **4036** எண்ணிக்கை வீட்டு கழிவு நீர் இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட சாலை சீரமைக்கும் பணியில் **33.910** கி.மீ.நீளத்தில் **18.155 கி.மீ.** சீரமைக்கும் பணி முடிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அறிக்கையாண்டில் செலவிடப்பட்ட தொகை **ரூ.9.60** கோடியாகும்.

**சிப்பம்–2** ல் பணிகள் **ரூ.10. 83** கோடிக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இதில் மொத்தம் **1036** ஆள் நுழைவாயில் கட்ட வேண்டிய பணியில் **524** ஆள் நுழைவாயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் குழாய் பதிக்கும் பணியில் மொத்தம் **26.856** கி.மீ. நீளத்தில் **10.982**

கி.மீ. நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணி முடிக்கப்பட்டது. **7000** எண்ணிக்கை வீட்டு கழிவுநீர் இணைப்புகள் கொடுக்க வேண்டிய பணியில் இதுவரை **2156** எண்ணிக்கை வீட்டு கழிவு நீர் இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட சாலை சீரமைக்கும் பணியில் **26.856 கி.மீ.**நீளத்தில் **4.500 கி.மீ.** சீரமைக்கும் பணி முடிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அறிக்கையாண்டில் செலவிடப்பட்ட தொகை **ரூ.3.62** கோடியாகும்.

**சிப்பம் 3** –ல் பணிகள் **ரூ.9.93** கோடிக்கு ஒப்பந்ததாரருக்கு நாளொன்றுக்கு 10.28 மில்லியன் லிட்டர் கழிவு நீரை சுத்தகரிக்கும் நிலையத்தை வடிவமைத்து கட்டுமானப் பணிகள் முடித்து மாற்றுதல் அடிப்படையில் ASP முறையில் செயல்படுத்த பணி உத்திரவு வழங்கப்பட்டு இப் பணியில் 80 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அறிக்கையாண்டில் செலவிடப்பட்ட தொகை **ரூ.8.15** கோடியாகும்.

மொத்தப் பணிகளில் 58 சதவீதம் அளவுக்கு முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை டிசம்பர்’2012–க்குள் முடித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## நகரமைப்பு பிரிவு

வேலூர் மாநகராட்சி எல்லைக்குள் 29 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் கீழ்கண்டவாறு அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம்

வேலூர் மாநகரம் அதை ஒட்டியுள்ள 53 ஊராட்சிகளையும் சேர்த்து அரசாணை எண்.172ல் அதன் பரப்பு 351.21 சதுர கி.மீ. ஆக வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகவும் வேலூர் உள்ளூர் திட்டக் குழும துணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. நகரமைப்பு பிரிவில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2000 ச.அடி பரப்புக்கு வணிக கட்டிடம் கட்டவும், 4000 ச.அடி பரப்புக்கு குடியிருப்பு கட்டிடம் கட்டவும் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது. மாநகராட்சி அதிகார வரம்புக்கு மேல் உள்ள விண்ணப்பங்கள் திட்ட அனுமதிக்காக உள்ளூர் திட்ட குழுமம் அனுப்பி வைக்கப்படுகிறது.

**புதிய பேருந்து நிலையம் பற்றிய சிறு குறிப்பு**

வேலூர் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் வேலூர் மாவட்ட கூட்டுறவு நுகர்வோர் பண்டக சாலைக்கு சொந்தமான நகரளவை எண்கள் 3,5,13/1 மற்றும் 13/2-ல் மொத்தம் 8.79 ஏக்கர் இடத்தினை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அரசாணை எண்.49 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2012-ல் ரூ.10.33 லட்சம் தொகையினை செலுத்தி தற்போது A கிரேடு அந்தஸ்துடன் வேலூர் மாநகராட்சி பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது.

தற்போது சீர்மிகு திட்டத்தில் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் வசதிகள் செய்யப்படும்.

**கட்டிட விதிகள் அமுலாக்குதல் :**

| | | |
|---|---|---|
| 2013-14ம் ஆண்டு ஆரம்பத்தில் நிலுவையில் உள்ள மனுக்கள் | : | 17 |
| 2014-15ம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் | : | 1106 |
| அனுமதி வழங்கப்பட்டது | : | 876 |
| அனுமதி மறுக்கப்பட்டது | : | 230 |
| நிலுவை | : | 17 |

**நகரமைப்பு பிரிவில் சிப்பந்திகள் பணியிடங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகரமைப்பு அலுவலர் (முதுநிலை) | : | 1 |
| 2. | நகரமைப்பு ஆய்வாளர் | : | 5 (காலியிடம்-1) |
| 3. | உதவி வரைவாளர் | : | 1 (காலியிடம்) |
| 4. | உதவியாளர் | : | 1 |
| 5. | இளநிலை உதவியாளர் | : | 3 (காலியிடம்) |
| 6. | ஏவலர் | : | 2 (காலியிடம்) |
| 7. | சங்கலி பணியாளர் | : | 5 (காலியிடம்-3) |

**வழக்குகள் :**

| | | |
|---|---|---|
| 1. | 31.03.2014-ல் தீர்க்கபடாமலிருந்த வழக்குகள் | - 17 |
| 2. | 2014-15ம் ஆண்டில் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டது | - 15 |
| 3. | முடிவு செய்யப்பட்டது | - -- |
| 4. | இருப்பில் நிலுவை | - -- |
| 5. | ஈ.பி. வழக்கு நடவடிக்கையில் உள்ளது | - -- |
| 6. | 31.03.2015ல் நிலுவையில் உள்ளது | - 74 |

## பொது நலம் மருத்துவ வசதி

நடப்பாண்டில் இந்திய முறை மருந்தகங்கள் (அதாவது) சித்தா–3, யுனானி–2, மருந்தகங்கள் ஆங்கில முறை மருந்தகங்கள் –2, தொடர்ந்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டது. அவைகளைத் தவிர அரசினால் நடத்தப்பட்டு வரும் பெண்ட்லண்ட் மருத்துவமனை, கிறித்துவ மருத்துவ கல்லூரி மருந்துவமனையும் இம்மாநகரில் திறம்பட செயலாற்றி வருகின்றன. எல்லா மருந்தகங்களையும் அவற்றிக்குரிய பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்கள், பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். நவீன மருத்துவ முறைகளை நகர பொது மக்கள் நாடுவதால் மாநகராட்சி பராமரிக்கும் மருந்தகங்கள் எதிர் பார்க்கும் அளவிற்கு பொது மக்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை. மாநகராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லாததாலும் இதற்கான அரசு மான்யம் ஏதும் பெறப்படாததாலும், இவைகளை அரசிடம் ஒப்படைத்து பராமரிக்க பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது.

**நோயாளிகள்**

மாநகராட்சியால் 2 ஆங்கில முறை, 3 சித்தா முறை மற்றம் 2 யுனானி முறை மருத்துவ மனைகள் நடத்தப் பட்டு வருகின்றன. எல்லா மருத்துவ மனைகளிலும் அறிக்கையாண்டில் 47878 நோயாளிகள் சிகிச்சை பெற்ற உள்ளார்கள். சென்ற ஆண்டு சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 104630 ஆகும். ஒருஙகிணைக்கப்பட்ட வேலூர் மாநகராட்சியில் 2013–14ம் ஆண்டில் ரூ.4,37,25,043/– செலவினம் (மருந்துகள், பணியாளர்கள் ஊதியம் உட்பட) மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செலவினமாக ரூ.2,92,63,348/– மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இடவசதியும், கருவி வசதியும்**

அனைத்து மருந்தகங்களும் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எல்லா மருந்தகங்களிலும் மருந்து கலக்க போதுமான அலுவலர்கள் பணிபுரிகின்றனர். மருந்தகங்கள் மாவட்ட மருத்துவ மனை இணை இயக்குநர், அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. தனிக்குறிப்பு ஒன்றும் இல்லை. பொதுவாக எல்லா மருந்தகங்களும் பயனுள்ளதாக விளங்குகின்றன. டாக்டர் பிரியம்வதா 01.04.2013 முதல் 30.06.2013 வரை மாநகர நல அலுவலராக இருந்து வந்தார். பின்னர் 01.07.2013 முதல் 12.11.2013 வரை இப்பதவியிடம் காலியாக இருந்தது, 13.11.2013 முதல் 31.03.2014 வரை டாக்டர்.எஸ்.வசந்த் திவாகர் மாநகர நல அலுவலராக பதவி வகித்து வந்தார்.

**பிறப்பு , இறப்பு**

இவ்வாண்டில் உயிருடன் பிறந்த குழந்தைகள் 2569 பிறப்பு வீதம் குடியிருப்பு மக்கள் வீதத்தில் ஆயிரத்திற்கு 14.4 ஆகும். இந்த ஆண்டு 589 இறப்புகள் நடந்துள்ளது. இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 3.3 ஆகும்.

இவ்வாண்டில் ஒரு வருடத்திற்குள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 18 சிசு மரண விகிதம் 7 ஆகும். ஒரே ஒரு தாய் பிள்ளைபேற்றால் இறந்தார். பிள்ளைபேறு இறப்பு விகிதம் 0.3 ஆகும். அறிக்கை ஆண்டில் 28 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளது.

**பிள்ளை பேறும், தாய் சேய் நலமும்**

**மாநகராட்சியின் கீழ் செயல்பட்டுவரும் மருத்துவமனைகள் மற்றும் அதன் விபரங்கள்**

**1) அலோபதி (சைதாப்பேட்டை)**

| | |
|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | – டாக்டர் A. கபிலன் |
| 2. மருந்தாளுனர் | – காலிப்பணியிடம் |
| 3. ஆண் செவிலி உதவியாளர் | – காலிப்பணியிடம் |
| 4. பெண் செவிலி உதவியாளர் | – காலிப்பணியிடம் |
| 5. காவலர் | – காலிப்பணியிடம் |

**2) அலோபதி (காகிதப்பட்டடை)**

| | |
|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | – காலிப்பணியிடம் |
| 2. மருந்தாளுனர் | – G. பேரானந்தம் |
| 3. ஆண் செவிலி உதவியாளர் | – காலிப்பணியிடம் |
| 4. பெண் செவிலி உதவியாளர் | – காலிப்பணியிடம் |
| 5. காவலர் | – காலிப்பணியிடம் |

**3) சித்தா மருத்துவமனை (தோட்டப்பாளையம்)**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். G. ருக்மணி
2. மருந்தாளுனர் – P. கிருஷ்ணன்
3. ஆண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
4. பெண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
5. காவலர் – காலிப்பணியிடம்

**4) யூனானி (கஸ்பா)**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். அப்துல் சலீம்
2. மருந்தாளுனர் – காலிப்பணியிடம்
3. ஆண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
4. பெண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
5. காவலர் – காலிப்பணியிடம்

**5) சித்தா (வேலப்பாடி)**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். என். கல்யாணி
2. மருந்தாளுனர் – காலிப்பணியிடம்
3. ஆண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
4. பெண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
5. காவலர் – காலிப்பணியிடம்

**6) சித்தா (கொசப்பேட்டை)**

1. மருத்துவ அலுவலர் – காலிப்பணியிடம்
2. மருந்தாளுனர் – திருமதி. பரிமளா டெய்சிராணி
3. ஆண் செவிலி உதவியாளர் – திரு. ஏ. செல்வராஜ்
4. பெண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
5. காவலர் – காலிப்பணியிடம்

**7) யுனானி (ஆர்.என். பாளையம்)**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். சலீம் அகமத் கான்
2. ஆண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
3. பெண் செவிலி உதவியாளர் – காலிப்பணியிடம்
4. காவலர் – காலிப்பணியிடம்

8) கஸ்பா

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். D. சோபனா

2. தொகுப்பாளர் ம்றும் எழுத்தர் – காலிப்பணியிடம்

3. பல்நோக்கு சுகாதார ணியாளர் – திருமதி. T. மகேஸ்வரி

– திருதி. L, ஜெயந்தி

– திருமதி. M. சாந்தி

– திருமதி. R. கிரிஜா

4. வகுப்பு IV பணியாளர் – காலிப்பணியிடம் 14 (பதிநான்கு)

MCH

**சைதாப்பேட்டை**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். A. அன்பு

2. பகுதி சுகாதார செவிலியர் – திரு. S. தில்லைமொழி

3. மகப்பேறு உதவியாளர்– காலிப்பணியிடம் 14

4. மகப்பேறு ஆயா – திருமதி. எஸ். உமாராணி

– திருமதி. ஞானம்அம்மாள்

– காலிப்பணியிடம் 10 (பத்து)

**அம்பேத்கார்நகர்**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். K. பத்மாவதி

2. தாய்சேய் அலுவலர் – திருமதி. S. பக்தவிஜயம்

3. கணினி தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் – காலிப்பணியிடம்

4. பல்நோக்கு சுகாதார பணியாளர் – திருமதி. S. தரணி

– திருமதி. K. சரளா

– திருமதி. S. எலிசபெத்

– திருமதி E. கிருஷ்ணா

– திருமதி. கோவிந்தம்மாள்

5. வகுப்ப IV பணியாளர்கள்

**லஷ்மிபுரம்**

1. மருத்துவ அலுவலர் – டாக்டர். T. இன்பவள்ளி

2. பகுதி சுகாதார செவிலியர் – திருமதி. கே. மல்லிகா

3. தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் – காலிப்பணியிடம்

4. பல்நோக்கு சுகாதார பணியாளர் – செல்வி . சி

– ஞானம்மாள் எம்

– ஜெ. மேரி ரோஸ்லின்

5. வகுப்பு IV பணியாளர்கள் – திருமதி. எஸ். சரோஜா

கடந்த ஆண்டை போலவே கஸ்பா , அம்பேத்கார் நகர் , லஷ்மிபுரம் ஆகிய பகுதிகளி இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு திட்டம் V–ன் கீழ் 3 நகர்ப்புற சுகாதார மையங்களும் சைதாப்பேட்டையில் ஒரு தாய்சேய் நல மையமும் இயங்கி வருகிறது. 3 சுகாதார மையங்களில் 13 படுக்கைகளும் ஒரு தாய் சேய் நல மையத்தில் 3 படுக்கைகளும் பராமரிக்கப்படுகின்றன. மேற்படி மையங்களில் மருத்துவ அலுவலர் மற்றும் மருத்துவ பணியாளர்கள் அப்பகுதி மக்களுக்கு பேறுகாலம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவ உதவிகளை செய்து வந்தனர். தகுதிவாய்ந்த குடும்பத்தினர் மற்றும் பேறுகால முன்பதிவு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டது. தாய்சேய் நல மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன.
பேறுகால முன் பதிவு தாய்மார்களுக்கு பதிவு செய்யப்பட்டது.

**போலியோ**

அறிக்கை ஆண்டில் தீவிர போலியோ சொட்டு மருந்து 2 தவணை போடப் பட்டுள்ளது.

**தடுப்பூசி**

| வ.எண் | விவரம் | இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1 | பி.சி.ஜி | 2407 | 2398 |
| 2 | பெண்டா | 2407 | 2387 |
| 3 | தட்டம்மை | 2407 | 2435 |
| 4 | டி.டி.(எம்) | 2673 | 2471 |
| 5 | வைட்டமின்.A | 12900 | 12776 |

**டெங்கு**

இவ்வாண்டு டெங்கு நோயால் 13 பேர் பாதிக்கப்பட்டனர்.

**வாந்தி, பேதி**

இவ்வாண்டு காலரா நோயால் எவரும் பாதிக்கப் படவில்லை.

**குளிர்காய்ச்சல் (Influenza)**

அறிக்கை ஆண்டில் நகரில் குளிர் காய்ச்சலால் இறந்தவர்கள் எவரும் இல்லை.

**காசநோய்**

இவ்வாண்டு இறப்பு பதிவேட்டின் படி காச நோயால் பாதிக்கப்பட்டவர் **18** பேர்.

**எண்ட்ரிக் காய்ச்சல் (Typhoid)**

இவ்வாண்டில் எண்ட்ரிக் காய்ச்சலால் இறப்பு இல்லை. இந்த ஆண்டு **12** பேர் பாதிக்கப்பட்டனர்.

**மலேரியா**

இவ்வாண்டில் இறப்பு பதிவேட்டின்படி மலேரியா காய்ச்சலினால் எவரும் இறக்க வில்லை.

**யானைக்கால் நோய்த் தடுப்பு திட்டம்**

அல்பென்டாசோல் மற்றும் DEC மாத்திரைகள் அரசு வழங்கப்பட்டது. அரசு உத்திரவின்படி ஜுலை **2013–**ல் பொது மக்களுக்கு நகர் நல அலுவலர் தலைமையில் அனைத்து பணியாளர்கள் மற்றும் தன்னார்வ பணியாளர்கள் மூலம்

**நகர்ப்புற மலேரியா திட்டம்**

நகர்புற மலேரியா திட்டம் **11.65** சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பழைய வேலூர் மாநகராட்சியில் **1978–**ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமுலாக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

வேலூர் நகரத்தின் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததின் காரணமாக இத் திட்டம் அமுலாக்கப்பட்டது. நகர்ப்புற மலேரியா திட்டத்திற்கு முன்பு யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் மாநில அரசின் **1/3**, பங்கு மான்யத்துடன் செயல்பட்டு வந்தது. அதன் கீழ் **174368** மீட்டர்கள் நீளமுள்ள சாக்கடைகள் மற்றும் **365** எண்ணிக்கையுள்ள தேங்கி நிற்கும் நீர் நிலையங்கள் குட்டைகள், போன்ற அசுத்தமான நீர்த்தேக்கங்களில் உற்பத்தி ஆகும் கொசுக்களில் புழுக்களை ஒழிப்பதற்காக **20** பணியாளர்களைக் கொண்டு (BASILUS THURINJIS) மூலமாக கொசு , புழு உற்பத்தி அழிக்கப் பட்டது.

நகர்ப்புற மலேரியா திட்டம் அமுல் செய்யப்பட்ட பின்பு மேற்கண்ட இடங்களில் மருந்து தெளிக்கப் பட்டதோடு இல்லாமல் வீடுகளிலுள்ள **6848** கிணறுகள் வீடுகள் தண்ணீர் வைத்திருக்கும் **44616** தொட்டிகள், **5653** மேல் நிலை நீர்த்தொட்டிகள் போன்ற இடங்களில் இருக்கும் தூயநீர் மலேரியா நேரிடையாக பரப்பக்கூடிய அனாபலிஸ் வகையைச் சார்ந்த கொசுக்களின் புழுக்களை அழிப்பதற்கு டெமிபாஸ் 50EE ரசாயன மருந்து தெளிக்கும் பணி செயல்பட்டு வருகிறது. மற்றும் **பேஸில்லஸ் துரிஞ்சிஸ்** தெளித்து கொசு உற்பத்தி தடுக்கப்பட்டது. **34680** லிட்டர் கிணறுகளுக்கு டெமிபாஸ்

50EC எனும் ரசாயன விஷப் பூச்சி கொல்லி மருந்து **20** பணியாளர்களைக் கொண்டு தினந்தோறும் தெளிக்கப் படுகிறது.

**2013–14–**ல் நகர மலேரியா தடுப்புத் திட்டத்தின் கீழ் (Active Case Deduction) தலைப்பில் இயங்கி வரும் நகர மலேரியா திட்டத்தில் நோய்க்க்ண்ட நபர்கள் கண்டெடுக்கும் போது அவர்கள் வீடுகளுக்கும், சுற்றுப்புற வீடுகளுக்கும் (Aspee Polo) என்னும் மருந்து தெளிப்பான் கருவியை கொண்டு கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டது மற்றும் புகை மருந்து அடிக்கும் எந்திரத்தின் மூலம் பைரீத்ரம 2% புகை மருந்து அடிக்கப்பட்டு வளர்ந்த கொசுக்கள் அழிக்கப்பட்டது.

**2014–**ஆம் ஆண்டில் **60710** நோயாளிகளுக்கு ரத்தம் சேகரித்து பரிசோதனை செய்யப் பட்டதில் **29** நபர்களுக்கு மலேரியா உள்ளது என கண்டறியப் பட்டு **29** நோயாளிகளுக்கு மலேரியாவிற்கென பூரண சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. அனைத்து நோயாளிகளை நேரில் சென்று விசாரிரித்ததில் அனைத்தும் வெளியூர் தொற்று என கண்டறியப் பட்டுள்ளது. உள்ளூர் தொற்று ஏதும் இல்லை. இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் திருப்பத்தூர் மற்றும் வேலூர் துணை இயக்குநர் பொது சுகாதாரம் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேற்படி பகுதி பொதுமக்களுக்கான மருத்துவ செயல்பாடுகள் அனைத்தும் பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

**பள்ளி நலத் திட்டம்**

வேலூர் மாநகராட்சியில் பொது நலப் பிரிவில் ஒரு அங்கமான அரசாணைப்படி பள்ளி நலத் திட்டம் துவக்கப் பட்டது. ஓர் மருத்துவ அலுவலர் இரு நல மேற்பாளர்வையாளர்கள் அலுவலக உத வியாளர்கள் கொண்ட குழு நகரின் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களை பரிசோதித்து நல கல்வி வழங்கி நலிந்தவர்களை சிறு வயதினிலே கண்டறிந்து கேடுகளை களைவது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. **6** வயது முதல் **17** வயது வயதுடைய மாணவர்கள் நலத்தை முதற்கொண்டு பரிசோதித்த ஆண்டிற்கு வாழ்வொளி திட்டத்தின் கீழ் 7 மருத்துவ அதிகாரிகள் திட்டத்தின் கீழ் குறியீடு என கொண்டுள்ள பள்ளி , சுகாதாரம், கல்வி, உணவு , சுகாதார மேற்பார்வையை, தடுப்பூசிகள் தந்து தொற்று நோய் வரும் முன் தடுத்தல், ஆசிரியர், பெற்றோர் மாணவர்களுக்கு நலங்களை புகட்டுதல் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**பள்ளி நலத் திட்டம் தடுப்பூசி பணி**

**பள்ளி மாணவர்களுக்கு நல்வாழ்வு திட்டம்**

தடுப்பூசி பணியில் **2014–2015** ஆண்டிற்கான இலக்கு அடைந்த சாதனை

| | | |
|---|---|---|
| மருத்துவ பரிசோதனை செய்யப் பட்ட பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை. | : | 24860 |
| பாதிக்கப்பட்ட மாணவர்கள் | : | 19700 |
| சிகிச்சை செய்யப்பட்ட மாணவர்கள் | : | 19700 |
| மேல் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிய மாணவர்கள் | : | 258 |
| **சாதனை விவரம்** | | |
| இரு நோய் தடுப்பு ( 5–6) வயது | : | 434 |
| இரணஜண்ணி 10 வயது | : | 990 |
| இரணஜண்ணி 16வயது | : | 1197 |

<u>பொது சுகாதார பிரிவு</u>

வேலூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 15 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களில் தற்போது 8 துப்புரவு ஆய்வாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர் மீதமுள்ள 7 பணியிடங்கள் காலியாக உள்ளது.

மேலும் 32 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடங்களில் தற்போது 30 பணியிடங்களில் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணிடங்கள் காலியாக உள்ளது. மாநகராட்சியின் குறியீட்டின்படி மொத்த துப்புரவு பணியாளர் 1450 ஆகும். இதில் தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 239 பணிபுரிந்து வருகின்றனர். (715 துப்புரவு பணியிடங்களுக்கு ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்) மீதமுள்ள 496 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

**அம்மா உணவகங்கள்**

வேலூர் மாநகராட்சி பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டமான அம்மா உணவகம் 10 இடங்களில் செயல்பட அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை

நாள்.31.05.2013-ன்படி 10 மையங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், தளவாட பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவுதல் தொடர்பான மாநகராட்சியின் பங்களிப்பாக ரூ.328.55 லட்சம் செலவில் கட்டப்பட்டு 02.06.2013 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 01.04.2014 முதல் 31.03.2015 வரை இட்லி-1076790 நபர்களும், சாம்பார் சாதம்-920326 மற்றும் தயிர் சாதம்-570316 நபர்களும் உண்டு பயன்பெற்றுள்ளார்கள்.

## திடக்கழிவு மேலாண்மை திட்டம்

வேலூர் மாநகராட்சி 89.915 சதுர கி.மீ பரப்பளவில் 60 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகரின் மக்கள் தொகை 504079 (2011) இங்கு 745 கி.மீ. நீளத்திற்கு 2328 சாலைகள், 126917 வீடுகள், 8163 வணிக கட்டிடங்கள், 210 நிறுவனங்கள் உள்ளன.

மாநகரில் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு பின்வருமாறு.

வீடுகளில் இருந்து 132 MT, வணிகப் பகுதிகளில் இருந்து 33 MT, 175 பெரு நிறுவணங்களில் 45 MT, கட்டிடக் கழிவுகள் மற்றும் சாக்கடை மண் 20 MT என மொத்தம் 230 மெட்ரிக் டன் அளவு .

மாநகராட்சி பகுதிகளில் 65% வீடு வீடாக குப்பைகள் வாங்கப்படுகிறது. இதற்காக 88 தள்ளுவண்டிகள், 274 மூன்று சக்கர சைக்கிள்கள், 24 ஆட்டோக்கள், 11 எண்ணிக்கை டம்பர் பிளேசர் லாரிகள், 10 எண்ணிக்கை மினி காம்பெக்டர் லாரிகள், 7 எண்ணிக்கை மினி டிப்பர் லாரிகள், 7 எண்ணிக்கை டிராக்டர்கள் திடக்கழிவுகளை சதுப்பேரி உரக்கிடங்கு எடுத்து செல்லும் பணிக்கு பயன்படுத்தப்பட்டது. 474 நிரந்தரப் பணியாளர்கள், 715 ஒப்பந்தப்பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுப்படுத்தப்பட்டனர்.

இம்மாநகராட்சியில் மார்கெட்டில் சேகராமாகும் கழிவுகளில் தினசரி 3 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகள் சதுப்பேரி உரக்கிடங்கில் மக்கிய உரம் தயாரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டது.

மேலும் திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே, 100% மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை தரம் பிரித்து பெறும் வகையில் இம்மாநகராட்சியில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. துப்புரவு மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

வேலூர் மாநகராட்சி சுற்றுச்சூழல் மாசின்றி திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்து குப்பையில்லா நகரமாக திகழ அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

**சிக்கணம் மற்றும் நாணய சங்கம்**

இம்மாநகராட்சியில் சிக்கணம் மற்றும் நாணய சங்கம் செயல் படத்தப்பட்டு வருகிறது. சொர்ண ஜெயந்தி திட்டத்தின்கீழ் 352 சங்கங்கள் செயல்படுத்தபட்டு வருகின்றன. ஆனால் இதுவரை 2014-2015-ஆம் ஆண்டிற்கு சிக்கணம் மற்றும் நாணய சங்கத்திற்கு இந்திய அரசின் மான்ய தொகை வரவில்லை.

**தணிக்கை**

2014-15ஆம் ஆண்டு முடிவில்1345 தணிக்கைத் தடைகள் நிலுவையாக இருந்தன. இவற்றுடன் 2014-15ம் ஆண்டில் தணிக்கை தடைகள் பெறப்படவில்லை மொத்தம் நிலுவையில் இருந்த 1345 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது. நிலுவை தணிக்கை பத்திகளுக்கு 250 பதில்கள் தயார் செய்து வைக்கப்பட்டள்ளது.

**பொது வரவினங்கள்**

01.04.1994 முதல் அரை ஆண்டிற்கு கீழ்குறிப்பிட்டுள்ள வரி விகிதங்கள் இருந்தன.

| | | |
|---|---|---|
| சொத்துவரி | : | |
| பொதுவரி | : | 4.00 % |
| மலம் அகற்றல் வரி | : | 1. 25 % |
| விளக்கு வரி | : | 2.00 % |
| குடிநீர் விநியோகம் | : | 5.00 % |
| வடிகால்வரி | : | 1.50 % |
| கல்விவரி | : | 2.50 % |

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரி திருத்தம் கடைசியாக 01.10.1998 முதல் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. காலிமனைக்கு அவற்றின் மொத்த மதிப்பில் 100-க்கு அரையாண்டிற்கு 0.72 காசு வீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. காலி மனைகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட வரி விகிதங்கள் நடை முறையில் உள்ளது.

| | | |
|---|---|---|
| பொதுவரி | : | 0.31 காசு |
| விளக்கு வரி | : | 0.06 காசு |
| குடிநீர் விநியோகம் | : | 0.25 காசு |
| கல்வி வரி | : | 0.10 காசு |
| மொத்தம் | : | 0.72 காசு |